# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண். 184 /2023

### அ.சா. 2 (LW 2 )

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | அரவிந்தகுமார் | **தொழில்** | |
| **த/க பெயர்** | ராஜா | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **15.09.2025** |

**1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.**

1 வது எதிரி ஆஜர்

**<u>முதல் விசாரணை</u>**

நான் பெத்தையகவுண்டன்பட்டியில் குடியிருந்து வருகிறேன். வெல்டிங் பட்டறை வைத்துள்ளேன். பிகாம் படித்துள்ளேன். அ.சா.1. என்னிடம் வேலை பார்த்த நபர் ஆவார். வழக்கில் இறந்த அழகுபாண்டி என்னிடம் வேலை பார்த்தவர் ஆவார். ஆஜர் எதிரியை என் பிறந்த நாளன்று பார்த்தேன். எதிரியை தெரியாது. கடந்த 08.06.2023 அன்று கோபியையும், அழகுபாண்டியையும் பழனி ரோட்டில் உள்ள அணில் சேமியா கம்பெனிக்கு வெல்டிங் வேலைக்காக அனுப்பி வைத்தேன்.அப்போது கோபி என்னிடம் போனில் தொடர்பு கொண்டு அழகுபாண்டியை வெட்டி கொன்று விட்டார்கள் என சொன்னார். நான் திண்டுக்கல் அரசு மருத்துவமனை போய் பார்த்தேன். நான் அழகுபாண்டியை பார்த்த போது தலையில் காயம் இருந்தது. கோபிநாத் உடன் திண்டுக்கல் நகர் மேற்கு காவல்நிலையம் சென்று புகார் கொடுக்க போனேன். அ.சா.1. புகார் கொடுத்தார். புகாரிலுள்ள சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். **அது அ.த.சா.ஆ.2. ஆகும்.** புகாரை நான் படித்துப் பார்த்துதான் கையெழுத்து போட்டேன்.
போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வழக்கில் இறந்து போன அழகுபாண்டி மீது போக்சோ வழக்கு உள்ளது என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லிய விவரங்களைத்தான் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதிரி என்னிடம் வேலை பார்க்கவில்லை அதனால் அவரை எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் சாட்சி கையொப்பம் செய்த புகாரில் என்ன விவரங்கள் எழுதியுள்ளது என்று எனக்கு தெரியும், அதில் அழகுபாண்டியை மகேந்திரன் கொலை செய்ததாக எழுதப்பட்டிருந்தது என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை – இல்லை.</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P VELMURUGAN

Digitally signed by P VELMURUGAN
Date: 2025.09.12 00:04:34 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.